**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16- ஆம் நாள் திங்கட்கிழமை

TNTV06-000088-2024

**அசல் வழக்கு எண்.128/2024**

**ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா,**
**ஆதிச்சபுரம் கிளை,**
**அதற்காக அதன் கிளை மேலாளர்.** .... வாதி

// **எதிர்**//

P. சோபியா .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்களும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஜெயபாலன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து வழக்குரை தொகை ரூ.74,608/- க்கு பின்வட்டி மற்றும் வழக்கு செலவுத்தொகையுடன் வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படிக்கும் மற்றும் இதர பரிகாரங்கள் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்த வழக்குரையில் சுருக்கம் :-**

**2.1.** பிரதிவாதி மற்றும் அவரது தந்தை வாதி வங்கியில் கல்வி கடன் கணக்கு எண்.34025597119 ல் தொடங்கி, கல்வி கடன் வழங்க வேண்டும் என 26.03.2014 ல் மனு கடிதம் கொடுத்தார்கள். மேற்கண்ட கடிதத்தை பெற்றுக் கொண்ட வாதி வங்கியானது பிரதிவாதியின் அடையாள அட்டை, கல்வி சான்று, கல்வி கட்டணம் ஆகியவற்றை பரிசீலித்து பிரதிவாதியின் கல்வி கடன் வங்கி கணக்கிற்கு ரூ.1,38,833/-ஐ செலுத்தியது. மேற்கண்ட கடன் தொகையானது 13.75% சதவீத வட்டியுடன் செலுத்த வேண்டும் என நிபந்தனையின்பேரில் கல்வி கடன் தொகை செலுத்தப்பட்டது.

**2.2.** ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் பகுதியளவு முறையாக ரூ.34,250/- வீதம் 07.08.2014 முதல் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது. பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் கூட்டாக கடன் ஏற்பாட்டு பத்திரத்தை வாதியின் வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்தனர். மேற்கண்ட உடன்படிக்கை இந்த வழக்கின் பாகமாக கருத்தில்கொள்ள வேண்டியது. அந்த உடன்படிக்கையின்படி 84 மாதங்கள் கழித்து கல்வி படிப்பு முதல் வருடத்திலிருந்து கடன் தொகையினை செலுத்த வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. RBI வங்கி நிர்ணயித்த வட்டி தொகை 13.75% வட்டியுடன் திரும்ப செலுத்த ஒப்புக்கொண்டார். அதன்படி பிரதிவாதியும் அவரது தந்தையும் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர்கள். இந்நிலையில் வேண்டுமென்றே கடன் தொகையினை திரும்ப செலுத்தாமல் தவித்ததால் செலுத்த வேண்டிய கடன் தொகையில் ரூ.74,608/- நிலுவையில் உள்ளது.

**2.3.** கடன் தொகையினை திரும்ப செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டு 04.08.2017, 02.08.2019 மற்றும் 29.07.2022 ம் தேதியில் பிரதிவாதி வாதியின் வங்கிக்கு

உயிர்ப்பு கடிதம் எழுதி கொடுத்ததால் மேற்கண்ட கடன் தொகை வசூல் செய்ய காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்பதால் வாதியானவர் பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :-</u>

**3.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளில் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். வாதி பிரதிவாதி கல்வி கடனாக ரூ.1,38,333/- பெற்றுக் கொண்டது பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதனை தவிர வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதி வரிக்கு வரி வன்மையாக மறுக்கிறார்.

**3.2.** உண்மையில் பிரதிவாதி தரப்பில் தவணை தொகைகளாக செலுத்தி வைக்கப்பட்டுள்ளதை கணக்கில் வரவு வைத்த பிறகும் வாதி வங்கி மேற்படி தொகைகளை உரிய வரவு வைக்காமலும், பிரதிவாதியால் செலுத்தி வைக்கப்பட்டுள்ள தொகைகளை கணக்கில் சேர்க்காமலும் வழக்கினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்ற வகையில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

**3.3.** பிரதிவாதி அவரது கல்வியை முடித்த பின்னரும், நாளது தேதி வரை எந்தவித வேலையும் கிடைக்காமல் இருந்து வருவதால் தொடர்ந்து வேலைக்கு முயற்சித்து வந்து கொண்டிருப்பதால் பிரதிவாதி கடன் தொகைகளை சரிவர செலுத்தி வைக்க இயலவில்லை. மேற்படி முழுவதுமாக தொகைகளை செலுத்தி கடனை முடித்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டதே தவிர வாதி வங்கி தெரிவித்துள்ளதை போல் பிரதிவாதி

அலட்சியத்துடனோ, வேண்டுமென்றோ திரும்ப செலுத்தாமல் இருக்கவில்லை, அந்த வகையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

**3.4.** பிரதிவாதி பெற்ற ரூ.1,38,833/- கடன் தொகைக்கு அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து திருப்பி செலுத்தி வைத்துள்ள நிலையில் பிரதிவாதி வாதி வங்கியினை அணுகி திருப்பி செலுத்தப்பட்டுள்ள தொகைகளை உரிய வரவு வைத்தும், வட்டி விகிதத்தை சரிவர கணக்கிட்டும் தெளிவான மீதத்தொகை விபரம் பற்றி கேட்க முற்பட்டபோது வாதி வங்கியினரின் குளறுபடிகளினாலும், முறையற்ற செயல்பாடுகளினாலுமே வாதி மீதத் தொகையை செலுத்தி வைக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டதே தவிர எந்த சூழலிலும் பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி செலுத்தி வைக்க தயாராகவே இருந்து வந்துள்ளார் என்று பிரதிவாதி தெரிவித்துள்ளார்.

**3.5.** பிரதிவாதி பெற்ற கடன் தொகையை உரிய முறையில் திரும்ப செலுத்தி வந்த நிலையில் வேலை கிடைக்காமல் அலைந்து வந்ததால் சரிவர செலுத்த முடியாத சூழ்நிலையை கருத்தில் கொண்டு உரிய கால அவகாசம் கோரியதை சற்றும் ஏற்காத வாதி வங்கி கடன் தொகையை செலுத்தி வைக்க சொல்லி நிர்பந்தப்படுத்தி பிரதிவாதியை பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாக்கி வந்துள்ளனர்.

**3.6.** வாதி வங்கி பிரதிவாதியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பிரதிவாதி கடனை வாங்கி வைத்து கொண்டு திரும்ப கொடுக்க தயாராக இல்லாதவரை போன்று தவறான தோற்றத்தை ஏற்படுத்தி பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர்.

**3.7.** வாதி வங்கியினர் அவர்களது சேவை குறைபாடுகளையும் அவர்களது வங்கியினரால் செய்யப்பட்ட தவறுகளையும் முழுவதுமாக மறைத்து பிரதிவாதிக்கு கஷ்ட

நஷ்டத்தை ஏற்படுத்தும்விதமாக அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளது முற்றிலும் ஏற்புடையதல்ல. வாதி வங்கி ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி தொகைகளுக்கும் மேலாக கணக்கிட்டு பிரதிவாதிகளை பெரும் தொகைகளை வட்டி தொகைகளாக செலுத்தி வைக்க சொல்லியிருப்பது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல. வாதி வங்கி பிரதிவாதிகளால் செலுத்தி வைக்கப்பட்டுள்ள தொகைகளை சரிவர கணக்கீடு செய்யாமல் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. ஆகவே வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

4) இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

5) **எழுவினாக்கள்** :-

1. Whether the plaintiff is entitled to the decree for recovery of sum of Rs.74,608/- as prayed for?
2. Whether the plaintiff is entitled to the interest as prayed for?
3. To what other relief?

6) **இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள்** :-

வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் விஜயகுமார் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

7) **வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்** :-

i) வாதியிடமிருந்து பிரதிவாதியானவர் ரூ.1,38,833/- கல்வி கடன் பெற்றுக்கொண்டு

பகுதியளவு பணத்தை செலுத்திவிட்டு மீதமுள்ள ரூ.74,608/-ஐ செலுத்தாததால் வாதியானவர் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பி மேற்கண்ட தொகையை திரும்ப செலுத்தவில்லை என்பதை வாதியானவர் தனது தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதி கோரியவாறு தாவா தொகை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்ற உத்தரவு வாதிக்கு கிடைக்கதக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) **<u>பிரதிவாதி தரப்பு வாதுரையின் சுருக்கம் :-</u>**

i) பிரதிவாதிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் பிரதிவாதி தரப்பு வாதுரை முன்னிறுத்தவில்லை.

9) **<u>தீர்வு :-</u>**

**<u>எழுவினா -1 முதல் எழுவினா - 3 - க்கான தீர்வுகள் :-</u>**

i) வாதி தரப்பு வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் விதமாக வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 ன் மூலமாக கடந்த 26.03.2014 ம் தேதிய கல்விக் கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 07.08.2014 ம் தேதிய கல்விக் கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 07.08.2014 ம் தேதிய ஏற்பாட்டு கடிதம் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 07.08.2014 – 16.04.2024 ம் தேதிய கல்விக் கடன் கணக்கின் பேரேட்டு அறிக்கை வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 16.04.2024 ம் தேதிய கல்விக் கடன் கணக்கின் முடிவு அறிக்கை வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 30.03.2025 ம் தேதிய வாதி வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 02.04.2024 ம் தேதிய திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 04.08.2017, 02.08.2019, 28.07.2022 ம் தேதிய உயிர்ப்பு கடிதம் (எண்ணிக்கை - 3) வா.சா.ஆ.8 ஆகவும், வங்கி மேலாளரின்

அடையாள அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.9 ஆகவும், பிரதிவாதியின் பிரமாண வாக்குமூலம் அசல் வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதியானவர் தனது கல்வி கடனுக்காக வாதியின் வங்கியை அணுகினார் என்பதும், அதற்கு பிரதிவாதியின் தந்தை உடன் கடனாளராக இருப்பதற்கு பொறுப்புக்கொண்டு எழுதிக் கொடுத்த ஆவணம் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ-2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், ரூ.1,38,833/-ஐ கல்வி கடன் திட்டத்திற்கான உடன்படிக்கை என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதியானவர் தான் பெற்ற கல்விக்கடன் மூலம் படிப்பு முடிந்து 1 வருடத்திற்கு பிறது அல்லது வேலை கிடைத்த 6 மாதத்திற்குள் மேற்படி கடனை திரும்ப செலுத்துவதாக எழுதிக்கொடுத்த கடிதம் என்பதும் தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 07.08.2014 முதல் 16.04.2024 வரையிலான காலகட்டத்திற்கான பிரதிவாதியின் வங்கி கணக்கு விபரம் என்பதும், மேற்படி வங்கி கணக்கு விபரத்தில் பிரதிவாதிக்கு ரூ.1,38,833/- கல்விக்கடன் வழங்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை ரூ.74,608/- நிலுவையில் உள்ளது என்பதற்கான சான்று என்பது தெரிய வருகிறது.

iii) மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதி வாதியின் வங்கியை அணுகி கல்வி கடன் பெற்றார் என்றும், அதில் நிலுவைத்தொகை ரூ.74,608/- உள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி கல்வி

கடன் பெறவில்லை என்பது தொடர்பாகவோ, அல்லது வாங்கிய கடன் முழுவதும் தீர்த்துவிட்டார் என்பது தொடர்பாக மறுக்க வேண்டிய பொறுப்பு கொண்ட பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் தனது தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், வாதி தரப்பில் முன்னிறுத்திய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறித்து குறுக்கு விசாரணை மூலம் மறுக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

iv) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதி பெற்ற கல்விக்கடனை திரும்ப செலுத்த வேண்டி வாதி வங்கி அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றும், மேற்கண்ட அறிவிப்பானது பிரதிவாதியின் தந்தை இறந்துவிட்டதால் சார்வு ஆகாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதி 07.08.2014 ம் தேதியில் பெற்ற கடனை 3 ஆண்டுகளுக்குள் கடனை திரும்ப செலுத்தாததால் 04.08.2017, 02.08.2019 மற்றும் 28.07.2022 தேதிகளில் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக உயிர்ப்பு கடிதம் ஏற்படுத்தினார் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட வா.சா.ஆ.8 ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கானது காலாவதி தோஷத்தால் பாதிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. மேற்படி பிரதிவாதியானவர் வாதியின் வங்கியில் கடன் தொகையை பெற்றுக்கொண்டு தான் செலுத்த வேண்டிய தொகையை ரூ.74,608/- ஐ செலுத்தவில்லை என்பதால் மேற்கண்ட தொகையினை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என எழுவினா -1 முதல் எழுவினா-3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

10) **முடிவில்,**

1. இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. இவ்வழக்கின் வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகையான ரூ.74,608/- (ரூபாய் எழுபத்து நான்காயிரத்து அறநூற்று எட்டு மட்டும்) தொகையினையும், வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பு நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பு நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 6% வட்டி செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.16 17:57:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சி** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.சுதாகர் (எ) பாலமுருகன் (வாதி), த/பெ. சுகுமாறன். |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.03.2014 | கல்விக் கடன் விண்ணப்பம். |
| வா.சா.ஆ.2 | 07.08.2014 | கல்விக் கடன் ஒப்பந்தம். |
| வா.சா.ஆ.3 | 07.08.2014 | ஏற்பாட்டு கடிதம். |
| வா.சா.ஆ.4 | 07.08.2014 – 16.04.2024 | கல்விக்கடன் கணக்கின் பேரேட்டு அறிக்கை. |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 16.04.2024 | கல்விக்கடன் கணக்கின் முடிவு அறிக்கை. |
| வா.சா.ஆ.6 | 30.03.2024 | வாதி வழக்கறிஞர் அறிவிப்பு. |
| வா.சா.ஆ.7 | 02.04.2024 | திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. |
| வா.சா.ஆ.8 | 13.10.2015, 10.10.2018, 06.10.2021, 08.02.2023 | உயிர்ப்புக் கடிதம் (எண்ணிக்கை - 4) |
| வா.சா.ஆ.9 | -- | வங்கி மேலாளரின் அடையாள அட்டை (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது). |
| வா.சா.ஆ.10 | -- | பிரதிவாதியின் பிரமாண வாக்குமூலம் அசல். |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.16 17:57:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.